[2004 ஜூலை 30

90—

பேருந்து வசதி

***15425—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மேல் பகுதியிலுள்ள சிறுகுன்றம் பகுதிக்குப் பேருந்து வசதி குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிக பேருந்து வசதி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்கு மேல் பகுதியிலுள்ள சிறுகுன்றம் பகுதிக்கு கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பயணிகளின் அடர்விற்கேற்ப இரு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. லா. சந்தானம் அவர்கள்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் சற்று இலாபத்திலே இயங்குகின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படி இயங்குகிறபோது, ஒவ்வோர் ஆண்டும் பழுதுபட்டிருக்கிற பேருந்துகளைப் புதுப்பிக்கின்ற நிலையில், இந்த ஆண்டு அப்படிப் புதுப்பிப்பதற்காக எத்தனை புதிய பேருந்துகள் வாங்கப்பட இருக்கின்றன? அப்படி வாங்குகிற நிலையில் எங்களது மதுரை மாவட்டத்தைப் பொறுத்தளவிலே பேருந்துகள் எல்லாம் மிகுந்த பழமையானதாக இருக்கிற காரணத்தால், அதற்குச் சற்றுக் கூடுதலான பேருந்துகள் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

2004 ஜூலை 30]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு நடத்துகின்ற போக்குவரத்துக் கழகங்கள்மூலமாகத் தரமான, பயணிகளுக்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அவர்கள் உத்தரவிட்டதோடு நின்றுவிடாமல், பழுதடைந்த பேருந்துகளைப் பழுது நீக்குவதற்காக, சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.30 கோடியை தாய் உள்ளத்தோடு இந்தத் துறைக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். அதனுடைய அடிப்படையில், நமது போக்குவரத்துத் துறையில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் பழுது பார்க்கப்பட வேண்டியவை என்று கண்டறியப்பட்ட பேருந்துகள் 5,316. இந்த 5,316 பேருந்துகளும் இந்த 30 கோடி ரூபாய் செலவிலே முழுமையாகப் பழுது நீக்கப்பட்டு, இப்போது நல்லமுறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், புதிய பேருந்துகள் வாங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நேற்று நடந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே 1325 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே, இப்போது புதிய பேருந்துகளை வாங்குகின்ற பணி தொடர இருக்கிறது. அப்படி வாங்குகிறபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சந்தானம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மதுரை மாவட்டத்திற்கும் — மதுரை மண்டல அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு — 250 புதிய பேருந்துகளை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல. வேறு யாராவது கேட்கக்கூடும்; எங்களுடைய பகுதிக்கு எவ்வளவு என்று கேட்பதற்கு முன்பாகவே, எந்தெந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எவ்வளவு புதிய பேருந்துகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன என்ற செய்தியைச் சொல்லிவிட விரும்புகிறேன். இன்றைக்கு, இந்த 1,325 பேருந்துகளில், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150 புதிய பேருந்துகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 75 பேருந்துகளும் — அதிலே 10 பேருந்துகள் Hi-tech வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள். ஆக அந்த 75 சொகுசுப் பேருந்துகளில் 10-ஐயும் சேர்த்து — வாங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதோடு

மட்டுமல்ல, விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 150; கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 200; கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250; மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 250. ஆக 1,325 பேருந்துகள் வாங்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 91, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

91—

பேருந்து வசதி

***18009–செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பகுதியில் பழுதடைந்த நிலையில் ஓடும் அரசுப் பேருந்துகளை மாற்றி, நல்ல நிலையில் உள்ள புதிய பேருந்துகளை இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதிக்குள்ளிட்ட பேரணாம்பட்டு பணிமனையிலிருந்து இயக்கப்படும் எந்தப் பேருந்தும் பழுதடைந்த நிலையிலோ, வயது முதிர்ந்த நிலையிலோ இல்லை. ஆறு மாதத்திற்கு ஒரு முறை அனைத்துப் பேருந்துகளும் புதுப்பிக்கப்பட்டு, தகுதி மற்றும் சாலைத் தகுதிச் சான்று போக்குவரத்து ஆய்வாளரிடம் பெறப்பட்டு, நல்ல நிலையில் தடத்தில் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.